சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 244/அ7/2024, நாள். 06.01.2024

பொருள்: பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி மற்றும் **"சென்னை வாசிக்கிறது"** என்னும் நிகழ்வில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வது சார்பாக.

பார்வை: செயலாளர், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் கடிதம் நாள். 02.01.2024.

.....

பார்வையில் காண் கடிதத்தின்படி, சென்னை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் 47 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சி ஜனவரி 3 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறுகிறது. இப்புத்தகக் காட்சியினை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் விதமாக 09.01.2024 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் அமைந்துள்ள புத்தகக் காட்சி வளாகத்தில் **"சென்னை வாசிக்கிறது"** என்னும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளைப் பங்கேற்கச் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொடக்க/உயர்/மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: விவரங்கள்.

6.1.24

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளித்தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள்,சென்னை மாவட்டம்

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை) வட சென்னை & தென் சென்னை மற்றும் தனியார் பள்ளிகள், சென்னை மாவட்டம்.

Scanned with OKEN Scanner

Kavitha Publication
044-42161657, 9677249801
kavithapublication@gmail.com

Nathan Gretham Book Sellers

M. SURESH

000244

05 JAN 2024

சென்னை-8

முதன்மைக்கல்வி அலுவலர் அவர்கள்,

எக்மோர்,

சென்னை மாவட்டம்

03.01.2024

பொருள்: சென்னைவாசிக்கிறது நிகழ்வுக்கு பள்ளி கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு செய்வதற்காக.

ஐயா,

47 ஆவது சென்னைப் புத்தககாட்சி ஜனவரி 3ம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறுகிறது. இப்புத்தகக்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கின்றார்கள்.

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இப்புத்தகக்காட்சியினை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக 08/01/2024 ஆம் தேதி திங்கள்கிழமை காலை 11 மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் அமைந்துள்ள புத்தகக்காட்சி வளாகத்தில்

'சென்னைவாசிக்கிறது' என்னும் நிகழ்வு நடைபெற இருக்கிறது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்நிகழ்விற்கு அரசு / தனியார் பள்ளி கல்லூரி மாணவர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு

தொடர்புக்கு

சாதிக் பாஷா

9791006360

செயலாளர்,

பபாசி.